தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆனி 31, திருவள்ளுவர் ஆண்டு – 2045

2014 ஜூலை 15, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அன்புஈனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு."

அன்பு மற்றவர்களிடம் விருப்பம் உடையவராய் வாழும் தன்மையைத் தரும். அதுவே அனைவரிடத்திலும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பையும் தரும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

135—

சுரங்க வளாக மின் நிலையம்

***7325—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகாதமிழ் காலரிஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தின்மூலம் சுரங்க வளாக மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். சத்தீஸ்கர் மாநிலத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கமான காரே பெல்மா செக்டார்-2 நிலக்கரி பகுதியிலிருந்து நிலக்கரியை எடுப்பதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கும் மகாராஷ்டிரா மாநில சுரங்க நிறுவனத்திற்கும் சேர்த்து ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியிலிருந்து பெறப்படும் நிலக்கரியை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் மகாராஷ்டிரா மாநில சுரங்க நிறுவனமும் முறையே 77:23 என்ற விகிதாசாரத்தில் பகிர்ந்துகொள்ள வேண்டும். மகாதமிழ் நிலக்கரிச் சுரங்கங்கள் லிமிடெட் என்ற பெயரில் கூட்டு முயற்சிக் குழுமம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குக் கிடைக்கும் நிலக்கரியின் பங்கினைப் பயன்படுத்தி சுரங்க வளாக மின் நிலையம் ஒன்று அமைக்கப்பட இருக்கிறது. நிலக்கரிச் சுரங்கத்தை அமைப்பதற்கும் இயக்குவதற்கும் திறந்த ஒப்பந்தப் புள்ளி முறையில் லான்கோ இன்ப்ராடெக் லிமிடெட் என்ற நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, இதற்கான ஒப்பந்த ஆணை அந்த நிறுவனத்திற்கு 3-8-2011 அன்று வழங்கப்பட்டது. இத்திட்டத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு 2,500 மெகா வாட் வரை மின்சாரம் கிடைக்கும். இந்தச் சுரங்க வளாக அனல் மின் நிலையம் 2018-2019 ஆம் ஆண்டில் மின் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 15]

136—

மேம்பாலம்

***858—திரு. ப. சம்பத்குமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு தொகுதி, பருத்திப்பள்ளி ஊராட்சி, சோமனப்பட்டி கிராமத்தில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) பருத்திப்பள்ளி ஊராட்சி, சோமனப்பட்டி கிராமத்தில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. ப. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலங்களில் உயிர்ச் சேதம் அதிகமாக ஏற்படுகின்றது. ஆகையால் பணியைத் துரிதப்படுத்தி உடனே முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தைச் சேர்ந்த வையப்பமலை-இராமநாதபுரம் சாலை கிலோ மீட்டர் 3/10-ல் பருத்திப்பள்ளி ஊராட்சி, சோமனப்பட்டி கிராமத்தில் திருமணிமுத்தாற்றின் குறுக்கே நபார்டு திட்டத்தில்*